ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவேங்கடம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவேங்கடம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ 1 ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ 2 ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ 3 ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ 4 ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ 5 ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ 6 ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ॥ **1.1.2** ॥

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.3** ॥

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ॥ **1.1.4** ॥

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரியாழ்வார் திருமொழி – தன்முகத்து

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்து ⋆
சோதி பரந்தெங்கும் ⋆
எத்தனை செய்யினும் ⋆
என்மகன் முகம் நேரொவ்வாய் ⋆
வித்தகன் வேங்கட வாணன் ⋆
உன்னை விளிக்கின்ற ⋆
கைத்தலம் நோவாமே ⋆
அம்புலீ ! கடிதோடிவா ‖ **1.5.3** ‖

## பெரியாழ்வார் திருமொழி – பொன்னியற்கிண்கிணி

என் இது மாயம் ⋆
என் அப்பன் அறிந்திலன் ⋆
முன்னைய வண்ணமே கொண்டு ⋆
அளவாய் என்ன ⋆
மன்னு நமுசியை ⋆
வானில் சுழற்றிய ⋆

மின்னு முடியனே ! அச்சோ அச்சோ ⋆
வேங்கட வாணனே ! அச்சோ அச்சோ || **1.9.8** ||

## பெரியாழ்வார் திருமொழி – வேலிக்கோல்

தென் இலங்கை மன்னன் ⋆
சிரம் தோள் துணிசெய்து ⋆
மின் இலங்கு பூண் ⋆
விபீடண நம்பிக்கு ⋆
என் இலங்கு நாமத்தளவும் ⋆
அரசென்ற ⋆
மின் அலங்காரற்கோர் கோல் கொண்டு வா ! ⋆
வேங்கட வாணர்க்கோர் கோல் கொண்டு வா || **2.6.9** ||

## பெரியாழ்வார் திருமொழி – ஆனிரை

மச்சொடு மாளிகை ஏறி ⋆
மாதர்கள் தம் இடம் புக்கு ⋆
கச்சொடு பட்டைக் கிழித்துக் ⋆
காம்பு துகில் அவை கீறி ⋆
நிச்சலும் தீமைகள் செய்வாய் ! ⋆
நீள் திருவேங்கடத்தெந்தாய் ! ⋆
பச்சைத் தமனகத்தோடு ⋆
பாதிரிப் பூச் சூட்ட வாராய் || **2.7.3** ||

## பெரியாழ்வார் திருமொழி – வெண்ணெய்விழுங்கி

போதர் கண்டாய் இங்கே போதர் கண்டாய் ⋆
போதரேன் என்னாதே போதர் கண்டாய் ⋆
ஏதேனும் சொல்லி அசலகத்தார் ⋆

ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன் ⋆
கோதுகலம் உடைக் குட்டனேயோ ! ⋆
குன்றெடுத்தாய் ! குடம் ஆடு கூத்தா ! ⋆
வேதப் பொருளே ! என் வேங்கடவா ! ⋆
வித்தகனே ! இங்கே போதராயே ‖ **2.9.6** ‖

## பெரியாழ்வார் திருமொழி – சீலைக்குதம்பை

கடி ஆர் பொழில் அணி வேங்கடவா ! ⋆
கரும் போரேறே ! ⋆
நீ உகக்கும் குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் ⋆
கொள்ளாதே போனாய் மாலே ! ⋆
கடிய வெங்கானிடைக் கன்றின் பின் போன ⋆
சிறுக்குட்டச் செங்கமல அடியும் வெதும்பி ⋆
உன் கண்கள் சிவந்தாய் ⋆
அசைந்திட்டாய் நீ எம்பிரான் ! ‖ **3.3.4** ‖

## பெரியாழ்வார் திருமொழி – சென்னியோங்கு

‡ சென்னி ஓங்கு ⋆
தண் திருவேங்கடம் உடையாய் ! ⋆
உலகு தன்னை வாழ நின்ற நம்பீ ! ⋆
தாமோதரா ! சதிரா ! ⋆
என்னையும் என் உடைமையையும் ⋆
உன் சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு ⋆
நின் அருளே புரிந்திருந்தேன் ⋆
இனி என் திருக் குறிப்பே ‖ **5.4.1** ‖

## நாச்சியார் திருமொழி – தையொரு திங்கள்

‡ தையொரு திங்களும் தரை விளக்கித் ⋆
தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள் ⋆
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து ⋆
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா ! ⋆
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி ⋆
உன்னையும் உம்பியையும் தொழுதேன் ⋆
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை ⋆
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே ‖ **1.1** ‖

மத்த நன் நறு மலர் முருக்க மலர் கொண்டு ⋆
முப்போதும் உன்னடி வணங்கி ⋆
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து ⋆
வாசகத்தழித்துன்னை வைதிடாமே ⋆
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு ⋆
கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி ⋆
வித்தகன் வேங்கட வாணன் என்னும் ⋆
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே ‖ **1.3** ‖

## நாச்சியார் திருமொழி – தெள்ளியார் பலர்

‡ காட்டில் வேங்கடம் ⋆
கண்ண புர நகர் ⋆
வாட்டம் இன்றி ⋆
மகிழ்ந்துறை வாமனன் ⋆
ஓட்டரா வந்து ⋆
என் கைப் பற்றி ⋆

தன்னொடும் கூட்டு மாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.2** ‖

## நாச்சியார் திருமொழி – மன்னு பெரும்புகழ்

வெள்ளை விளிசங்கிடம் கையில் கொண்ட ⋆
விமலன் எனக்குருக் காட்டான் ⋆
உள்ளம் புகுந்தென்னை நைவித்து ⋆
நாளும் உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும் ⋆
கள் அவிழ் செண்பகப் பூ மலர் கோதிக் ⋆
களித்திசை பாடும் குயிலே ⋆
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது ⋆
என் வேங்கடவன் வரக் கூவாய் ‖ **5.2** ‖

## நாச்சியார் திருமொழி – விண்ணீல மேலாப்பு

‡ விண்ணீல மேலாப்பு ⋆
விரித்தாற் போல் மேகங்காள் ⋆
தெண்ணீர் பாய் வேங்கடத்து ⋆
என் திருமாலும் போந்தானே ⋆
கண்ணீர்கள் முலைக் குவட்டில் ⋆
துளி சோரச் சோர்வேனை ⋆
பெண்ணீர்மை ஈடழிக்கும் ⋆
இது தமக்கோர் பெருமையே ‖ **8.1** ‖

மா முத்த நிதி சொரியும் ⋆
மா முகில்காள் ⋆
வேங்கடத்துச் சாமத்தின் நிறங்கொண்ட ⋆
தாளாளன் வார்த்தை என்னே ⋆

காமத் தீ உள் புகுந்து ⋆
கதுவப் பட்டிடைக் கங்குல் ⋆
ஏமத்தோர் தென்றலுக்கு ⋆
இங்கிலக்காய் நான் இருப்பேனே ॥ **8.2** ॥

ஒளி வண்ணம் வளை சிந்தை ⋆
உறக்கத்தோடிவை எல்லாம் ⋆
எளிமையால் இட்டென்னை ⋆
ஈடழியப் போயினவால் ⋆
குளிர் அருவி வேங்கடத்து ⋆
என் கோவிந்தன் குணம் பாடி ⋆
அளி அத்த மேகங்காள் ! ⋆
ஆவி காத்திருப்பேனே ॥ **8.3** ॥

மின் ஆகத்தெழுகின்ற ⋆
மேகங்காள் ⋆
வேங்கடத்துத் தன் ஆகத் திருமங்கை ⋆
தங்கிய சீர் மார்வற்கு ⋆
என் ஆகத்திளங்கொங்கை ⋆
விரும்பித் தாம் நாள் தோறும் ⋆
பொன் ஆகம் புல்குதற்கு ⋆
என் புரிவுடைமை செப்புமினே ॥ **8.4** ॥

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த ⋆
மா முகில்காள் ! ⋆
வேங்கடத்துத் தேன் கொண்ட மலர் சிதறத் ⋆
திரண்டேறிப் பொழிவீர்காள் ⋆
ஊன் கொண்ட வள் உகிரால் ⋆

இரணியனை உடல் இடந்தான் ⋆
தான் கொண்ட சரி வளைகள் ⋆
தருமாகில் சாற்றுமினே ॥ **8.5** ॥

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த ⋆
தண் முகில்காள் ! ⋆
மா வலியை நிலங்கொண்டான் வேங்கடத்தே ⋆
நிரந்தேறிப் பொழிவீர்காள் ⋆
உலங்குண்ட விளங்கனி போல் ⋆
உள் மெலியப் புகுந்து ⋆
என்னை நலங்கொண்ட நாரணற்கு ⋆
என் நடலை நோய் செப்புமினே ॥ **8.6** ॥

‡ சங்க மா கடல் கடைந்தான் ⋆
தண் முகில்காள் ! ⋆
வேங்கடத்துச் செங்கண் மால் சேவடிக் கீழ் ⋆
அடி வீழ்ச்சி விண்ணப்பம் ⋆
கொங்கை மேல் குங்குமத்தின் ⋆
குழம்பழியப் புகுந்து ⋆
ஒரு நாள் தங்குமேல் ⋆
என் ஆவி தங்குமென்றுரையீரே ॥ **8.7** ॥

கார் காலத்தெழுகின்ற ⋆
கார்முகில்காள் ! ⋆
வேங்கடத்துப் போர் காலத்தெழுந்தருளிப் ⋆
பொருதவனார் பேர் சொல்லி ⋆
நீர் காலத் தெருக்கில் ⋆
அம் பழவிலை போல் வீழ்வேனை ⋆

வார் காலத்தொரு நாள் ⋆
தம் வாசகம் தந்தருளாரே ॥ **8.8** ॥

மத யானை போல் எழுந்த ⋆
மா முகில்காள் ! ⋆
வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் ! ⋆
பாம்பணையான் வார்த்தை என்னே ⋆
கதி என்றும் தான் ஆவான் ⋆
கருதாது ⋆
ஓர் பெண் கொடியை வதை செய்தான் என்னும் சொல் ⋆
வையகத்தார் மதியாரே ॥ **8.9** ॥

‡ நாகத்தின் அணையானை ⋆
நன்னுதலாள் நயந்துரை செய் மேகத்தை ⋆
வேங்கடக் கோன் ⋆
விடு தூதில் விண்ணப்பம் ⋆
போகத்தில் வழுவாத ⋆
புதுவையர் கோன் கோதை தமிழ் ⋆
ஆகத்து வைத்துரைப்பார் அவர் ⋆
அடியார் ஆகுவரே ॥ **8.10** ॥

### நாச்சியார் திருமொழி – கார்க்கோடல் பூக்காள்

பாடும் குயில்காள் ! ⋆
ஈதென்ன பாடல் ⋆
நல் வேங்கட நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் ⋆
வந்து பாடுமின் ⋆
ஆடும் கருளக் கொடி உடையார் ⋆
வந்தருள் செய்து ⋆

கூடுவர் ஆயிடில் ⋆
கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே ‖ **10.5** ‖

மழையே ! மழையே ! மண் புறம் பூசி ⋆
உள்ளாய் நின்று ⋆
மெழுகூற்றினாற் போல் ⋆
ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற ⋆
அழகப் பிரானார் தம்மை ⋆
என் நெஞ்சத்தகப்படத்தழுவி நின்று ⋆
என்னைத் ததர்த்திக் கொண்டு ⋆
ஊற்றவும் வல்லையே ‖ **10.8** ‖

## பெருமாள் திருமொழி – ஊனேறு

‡ ஊனேறு செல்வத்து ⋆
உடற் பிறவி யான் வேண்டேன் ⋆
ஆனேறேழ் வென்றான் ⋆
அடிமைத் திறம் அல்லால் ⋆
கூனேறு சங்கம் இடத்தான் தன் ⋆
வேங்கடத்துக் ⋆
கோனேரி வாழும் ⋆
குருகாய்ப் பிறப்பேனே ‖ **4.1** ‖

ஆனாத செல்வத்து ⋆
அரம்பையர்கள் தற் சூழ ⋆
வான் ஆளும் செல்வமும் ⋆
மண் அரசும் யான் வேண்டேன் ⋆
தேன் ஆர் பூஞ்சோலைத் ⋆
திருவேங்கடச் சுனையில் ⋆

மீனாய்ப் பிறக்கும் ⋆
விதி உடையேன் ஆவேனே ॥ **4.2** ॥

பின்னிட்ட சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
துன்னிட்டுப் புகல் அரிய ⋆
வைகுந்த நீள் வாசல் ⋆
மின் வட்டச் சுடராழி ⋆
வேங்கடக்கோன் தான் உமிழும் ⋆
பொன் வட்டில் பிடித்துடனே ⋆
புகப் பெறுவேன் ஆவேனே ॥ **4.3** ॥

ஒண் பவள வேலை ⋆
உலவு தண் பாற்கடலுள் ⋆
கண் துயிலும் மாயோன் ⋆
கழல் இணைகள் காண்பதற்கு ⋆
பண் பகரும் வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துச் ⋆
செண்பகமாய் நிற்கும் ⋆
திருவுடையேன் ஆவேனே ॥ **4.4** ॥

கம்ப மத யானை ⋆
கழுத்தகத்தின் மேல் இருந்து ⋆
இன்பமரும் செல்வமும் ⋆
இவ் அரசும் யான் வேண்டேன் ⋆
எம் பெருமான் ஈசன் ⋆
எழில் வேங்கட மலை மேல் ⋆

தம்பகமாய் நிற்கும் ⋆
தவம் உடையேன் ஆவேனே ॥ **4.5** ॥

மின் அனைய நுண்ணிடையார் ⋆
உருப்பசியும் மேனகையும் ⋆
அன்னவர்தம் பாடலொடும் ⋆
ஆடல் அவை ஆதரியேன் ⋆
தென்னவென வண்டினங்கள் ⋆
பண் பாடும் வேங்கடத்துள் ⋆
அன்னனைய பொற்குவடாம் ⋆
அருந்தவத்தென் ஆவேனே ॥ **4.6** ॥

வான் ஆளும் மா மதி போல் ⋆
வெண் குடைக் கீழ் ⋆
மன்னவர் தம் கோன் ஆகி வீற்றிருந்து ⋆
கொண்டாடும் செல்வறியேன் ⋆
தேனார் பூஞ்சோலைத் ⋆
திரு வேங்கட மலை மேல் ⋆
கானாறாய்ப் பாயும் ⋆
கருத்துடையேன் ஆவேனே ॥ **4.7** ॥

பிறை ஏறு சடையானும் ⋆
பிரமனும் இந்திரனும் ⋆
முறையாய பெரு வேள்விக் ⋆
குறை முடிப்பான் மறை ஆனான் ⋆
வெறியார் தண் சோலைத் ⋆
திரு வேங்கடமலை மேல் ⋆

நெறியாய்க் கிடக்கும் ⋆
நிலை உடையேன் ஆவேனே ॥ **4.8** ॥

‡ செடியாய வல்வினைகள் ⋆
தீர்க்கும் திருமாலே ⋆
நெடியானே ! வேங்கடவா ! ⋆
நின் கோயிலின் வாசல் ⋆
அடியாரும் வானவரும் ⋆
அரம்பையரும் கிடந்தியங்கும் ⋆
படியாய்க் கிடந்து ⋆
உன் பவளவாய் காண்பேனே ॥ **4.9** ॥

உம்பர் உலகாண்டு ⋆
ஒரு குடைக் கீழ் உருப்பசி தன் ⋆
அம் பொற் கலை அல்குல் ⋆
பெற்றாலும் ஆதரியேன் ⋆
செம் பவள வாயான் ⋆
திருவேங்கடம் என்னும் ⋆
எம் பெருமான் பொன்மலை மேல் ⋆
ஏதேனும் ஆவேனே ॥ **4.10** ॥

‡ மன்னிய தண் சாரல் ⋆
வட வேங்கடத்தான் தன் ⋆
பொன்னியலும் சேவடிகள் ⋆
காண்பான் புரிந்திறைஞ்சி ⋆
கொன்னவிலும் கூர்வேல் ⋆
குலசேகரன் சொன்ன ⋆

பன்னிய நூல் தமிழ் வல்லார் ⋆
பாங்காய பத்தர்களே ‖ **4.11** ‖

### திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – திருச்சந்தவிருத்தம்

குன்றில் நின்று வான் இருந்து ⋆
நீள் கடல் கிடந்து ⋆
மண் ஒன்று சென்ற தொன்றை உண்டு ⋆
அதொன்றிடந்து பன்றியாய் ⋆
நன்று சென்ற நாளவற்றுள் ⋆
நல்லுயிர் படைத்தவர்க்கு ⋆
அன்று தேவ மைத்தளித்த ⋆
ஆதி தேவன் அல்லையே ‖ **48** ‖

‡ செழுங்கொழும் பெரும்பனி ⋆
பொழிந்திட ⋆
உயர்ந்த வேய் விழுந்துலர்ந்தெழுந்து ⋆
விண் புடைக்கும் வேங்கடத்துள் நின்று ⋆
எழுந்திருந்து தேன் பொருந்து ⋆
பூம்பொழில் தழைக் கொழும் ⋆
செழுந் தடங்குடந்தையுள் ⋆
கிடந்த மாலும் அல்லையே ‖ **60** ‖

நிற்பதும் ஓர் வெற்பகத்து ⋆
இருப்பும் விண் கிடப்பதும் ⋆
நற் பெருந் திரைக் கடலுள் ⋆
நான் இலாத முன்னெலாம் ⋆
அற்புதன் அனந்த சயனன் ⋆
ஆதிபூதன் மாதவன் ⋆

நிற்பதும் இருப்பதும் ⋆
கிடப்பதும் என் நெஞ்சுளே ॥ **65** ॥

கடைந்து பாற்கடல் கிடந்து ⋆
காலநேமியைக் கடிந்து ⋆
உடைந்த வாலி தன் தனக்கு ⋆
உதவ வந்திராமனாய் ⋆
மிடைந்த ஏழ் மரங்களும் ⋆
அடங்க எய்து ⋆
வேங்கடம் அடைந்த மால பாதமே ⋆
அடைந்து நாளும் உய்ம்மினோ ॥ **81** ॥

## திருப்பானாழ்வார் அருளிச்செய்த – அமலனாதிபிரான்

‡ அமலன் ஆதி பிரான் ⋆
அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் ⋆
விண்ணவர் கோன் ⋆
விரையார் பொழில் வேங்கடவன் ⋆
நிமலன் நின்மலன் நீதி வானவன் ⋆
நீள் மதிள் அரங்கத்தம்மான் ⋆
திருக்கமல பாதம் வந்து ⋆
என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே ॥ **1** ॥

‡ மந்தி பாய் ⋆
வட வேங்கட மா மலை ⋆
வானவர்கள் சந்தி செய்ய நின்றான் ⋆
அரங்கத்தரவின் அணையான் ⋆
அந்தி போல் நிறத்தாடையும் ⋆
அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில் ⋆

உந்தி மேலதன்றோ ⋆
அடியேன் உள்ளத்தின் உயிரே ‖ **3** ‖

### பெரிய திருமொழி – கொங்கலர்ந்த

‡ கொங்கலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த ⋆
கோவலன் எம் பிரான் ⋆
சங்கு தங்கு தடம் கடல் துயில் கொண்ட ⋆
தாமரைக் கண்ணினன் ⋆
பொங்கு புள்ளினை வாய் பிளந்த ⋆
புராணர் தம் இடம் ⋆
பொங்கு நீர்ச் செங்கயல் திளைக்கும் சுனைத் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.1** ‖

‡ பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம் ⋆
இரங்க வன் பேய் முலை ⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை ⋆
பிரான் அவன் பெருகும் இடம் ⋆
வெள்ளியான் கரியான் ⋆
மணி நிற வண்ணன் என்றெண்ணி ⋆
நாள் தொறும் தெள்ளியார் வணங்கும் மலை ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.2** ‖

நின்ற மா மருதிற்று வீழ ⋆
நடந்த நின்மலன் நேமியான் ⋆
என்றும் வானவர் கை தொழும் ⋆
இணைத் தாமரை அடி எம் பிரான் ⋆
கன்றி மாரி பொழிந்திடக் ⋆
கடிதாநிரைக்கிடர் நீக்குவான் ⋆

சென்று குன்றம் எடுத்தவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.3** ‖

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு ⋆
வென்ற பரஞ்சுடர் ⋆
கோத்தங்காயர் தம் பாடியில் ⋆
குரவை பிணைந்த எம் கோவலன் ⋆
ஏத்துவார் தம் மனத்துள்ளான் ⋆
இடவெந்தை மேவிய எம் பிரான் ⋆
தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.4** ‖

வண் கையான் அவுணர்க்கு நாயகன் ⋆
வேள்வியில் சென்று மாணியாய் ⋆
மண் கையால் இரந்தான் ⋆
மராமரம் ஏழும் எய்த வலத்தினான் ⋆
எண் கையான் இமயத்துள்ளான் ⋆
இருஞ்சோலை மேவிய எம் பிரான் ⋆
திண் கைம்மா துயர் தீர்த்தவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.5** ‖

எண் திசைகளும் ஏழ் உலகமும் வாங்கிப் ⋆
பொன் வயிற்றில் பெய்து ⋆
பண்டோர் ஆல் இலைப் பள்ளி கொண்டவன் ⋆
பால் மதிக்கிடர் தீர்த்தவன் ⋆
ஒண் திறல் அவுணன் உரத்துகிர் வைத்தவன் ⋆
ஒள் எயிற்றொடு ⋆

திண் திறல் அரி ஆயவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.6** ‖

பாரும் நீர் எரி காற்றினொடு ⋆
ஆகாசமும் இவை ஆயினான் ⋆
பேரும் ஆயிரம் பேச நின்ற ⋆
பிறப்பிலி பெருகும் இடம் ⋆
காரும் வார் பனி நீள் விசும்பிடைச் ⋆
சோரு மா முகில் தோய் தர ⋆
சேரும் வார் பொழில் சூழ் ⋆
எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.7** ‖

அம்பரம் அனல் கால் நிலம் ⋆
சலம் ஆகி நின்ற அமரர் கோன் ⋆
வம்புலா மலர் மேல் ⋆
மலி மட மங்கை தன் கொழுநன் அவன் ⋆
கொம்பின் அன்ன இடை மடக் குற மாதர் ⋆
நீள் இதணம் தொறும் ⋆
செம் புனம் அவை காவல் கொள் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.8** ‖

பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் ⋆
சொல்லி நின்று பின்னரும் ⋆
பேசுவார் தமை உய்ய வாங்கிப் ⋆
பிறப்பறுக்கும் பிரான் இடம் ⋆
வாச மா மலர் நாறு வார் ⋆
பொழில் சூழ் தரும் உலகுக்கெல்லாம் ⋆

தேசமாய்த் திகழும் மலைத் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.9** ॥

‡ செங்கயல் திளைக்கும் சுனைத் ⋆
திருவேங்கடத்துறை செல்வனை ⋆
மங்கையர் தலைவன் கலிகன்றி ⋆
வண் தமிழ்ச் செஞ்சொல் மாலைகள் ⋆
சங்கை இன்றித் தரித்துரைக்க வல்லார்கள் ⋆
தஞ்சம் அதாகவே ⋆
வங்க மா கடல் வையம் காவலர் ஆகி ⋆
வான் உலகாள்வரே ॥ **1.8.10** ॥

## பெரிய திருமொழி – தாயே தந்தை

‡ தாயே தந்தை என்றும் ⋆
தாரமே கிளை மக்கள் என்றும் ⋆
நோயே பட்டொழிந்தேன் ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
வேயேய் பூம் பொழில் சூழ் ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆
நாயேன் வந்தடைந்தேன் ⋆
நல்கி ஆள் என்னைக் கொண்டருளே ॥ **1.9.1** ॥

மானேய் கண் மடவார் ⋆
மயக்கில் பட்டு ⋆
மா நிலத்து நானே நானாவித ⋆
நரகம் புகும் பாவம் செய்தேன் ⋆
தேனேய் பூம் பொழில் சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆

என் ஆனாய் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.2** ‖

கொன்றேன் பல் உயிரைக் ⋆
குறிக்கோள் ஒன்றிலாமையினால் ⋆
என்றேனும் இரந்தார்க்கு ⋆
இனிதாக உரைத்தறியேன் ⋆
குன்றேய் மேகம் அதிர் ⋆
குளிர் மா மலை வேங்கடவா ! ⋆
அன்றே வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.3** ‖

குலம் தான் எத்தனையும் ⋆
பிறந்தே இறந்தெய்த்தொழிந்தேன் ⋆
நலம் தான் ஒன்றும் இலேன் ⋆
நல்லதோர் அறம் செய்தும் இலேன் ⋆
நிலம் தோய் நீள் முகில் சேர் ⋆
நெறியார் திருவேங்கடவா ! ⋆
அலந்தேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.4** ‖

எப் பாவம் பலவும் ⋆
இவையே செய்திளைத்தொழிந்தேன் ⋆
துப்பா ! நின் அடியே ⋆
தொடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் ⋆
செப்பார் திண்வரை சூழ் ⋆
திருவேங்கட மாமலை ⋆

என் அப்பா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.5** ॥

மண்ணாய் நீர் எரி கால் ⋆
மஞ்சுலாவும் ஆகாசமுமாம் ⋆
புண்ணார் ஆக்கை தன்னுள் ⋆
புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் ⋆
விண்ணார் நீள் சிகர ⋆
விரையார் திருவேங்கடவா ! ⋆
அண்ணா ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.6** ॥

தெரியேன் பாலகனாய்ப் ⋆
பல தீமைகள் செய்தும் இட்டேன் ⋆
பெரியேன் ஆயின பின் ⋆
பிறர்க்கே உழைத்தேழை ஆனேன் ⋆
கரி சேர் பூம் பொழில் சூழ் ⋆
கன மா மலை வேங்கடவா ! ⋆
அரியே ! வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ॥ **1.9.7** ॥

நோற்றேன் பல் பிறவி ⋆
உன்னைக் காண்பதோர் ஆசையினால் ⋆
ஏற்றேன் இப் பிறப்பே ⋆
இடர் உற்றனன் எம் பெருமான் ! ⋆
கோல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
குளிர் சோலை சூழ் வேங்கடவா ! ⋆

ஆற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.8** ‖

பற்றேல் ஒன்றும் இலேன் ⋆
பாவமே செய்து பாவி ஆனேன் ⋆
மற்றேல் ஒன்றறியேன் ⋆
மாயனே ! எங்கள் மாதவனே ! ⋆
கல் தேன் பாய்ந்தொழுகும் ⋆
கமலச்சுனை வேங்கடவா ! ⋆
அற்றேன் வந்தடைந்தேன் ⋆
அடியேனை ஆட் கொண்டருளே ‖ **1.9.9** ‖

‡ கண்ணாய் ஏழ் உலகுக்குயிராய ⋆
எங்கார் வண்ணனை ⋆
விண்ணோர் தாம் பரவும் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
திண்ணார் மாடங்கள் சூழ் ⋆
திரு மங்கையர் கோன் கலியன் ⋆
பண்ணார் பாடல் பத்தும் ⋆
பயில்வார்க்கில்லை பாவங்களே ‖ **1.9.10** ‖

## பெரிய திருமொழி – கண்ணார் கடல்சூழ்

‡ கண் ஆர் கடல் சூழ் ⋆
இலங்கைக்கிறைவன் தன் ⋆
திண் ஆகம் பிளக்கச் ⋆
சரம் செல உய்த்தாய் ! ⋆
விண்ணோர் தொழும் ⋆
வேங்கட மா மலை மேய ⋆

அண்ணா ! அடியேன் ⋆
இடரைக் களையாயே ॥ **1.10.1** ॥

இலங்கைப் பதிக்கு ⋆
அன்றிறையாய ⋆
அரக்கர் குலம் கெட்டவர் மாளக் ⋆
கொடிப் புள் திரித்தாய் ! ⋆
விலங்கல் குடுமித் ⋆
திருவேங்கடம் மேய ⋆
அலங்கல் துளப முடியாய் ! ⋆
அருளாயே ॥ **1.10.2** ॥

நீர் ஆர் கடலும் ⋆
நிலனும் முழுதுண்டு ⋆
ஏர் ஆலம் இளந் தளிர் மேல் ⋆
துயில் எந்தாய் ! ⋆
சீர் ஆர் ⋆
திருவேங்கட மா மலை மேய ⋆
ஆரா அமுதே ! ⋆
அடியேற்கருளாயே ॥ **1.10.3** ॥

உண்டாய் உறிமேல் ⋆
நறு நெய் அமுதாக ⋆
கொண்டாய் குறளாய் ⋆
நிலம் ஈர் அடியாலே ⋆
விண் தோய் சிகரத் ⋆
திருவேங்கடம் மேய ⋆

அண்டா ! அடியேனுக்கு ⋆
அருள் புரியாயே ॥ **1.10.4** ॥

தூணாய் அதன் ஊடு ⋆
அரியாய் வந்து தோன்றி ⋆
பேணா அவுணன் உடலம் ⋆
பிளந்திட்டாய் ! ⋆
சேண் ஆர் ⋆
திருவேங்கட மா மலை மேய ⋆
கோள் நாகணையாய் ! ⋆
குறிக்கொள் எனை நீயே ॥ **1.10.5** ॥

மன்னா ⋆
இம் மனிசப் பிறவியை நீக்கி ⋆
தன் ஆக்கித் ⋆
தன் இன் அருள் செய்யும் தலைவன் ⋆
மின் ஆர் முகில் சேர் ⋆
திருவேங்கடம் மேய ⋆
என் ஆனை என் அப்பன் ⋆
என் நெஞ்சில் உளானே ॥ **1.10.6** ॥

மானேய் மட நோக்கி ⋆
திறத்தெதிர் வந்த ⋆
ஆனேய் விடை செற்ற ⋆
அணி வரைத் தோளா ! ⋆
தேனே ! ⋆
திருவேங்கட மா மலை மேய ⋆

கோனே ! என் மனம் ⋆
குடி கொண்டிருந்தாயே ॥ **1.10.7** ॥

சேயன் அணியன் ⋆
என சிந்தையுள் நின்ற மாயன் ⋆
மணி வாள் ஒளி ⋆
வெண் தரளங்கள் ⋆
வேய் விண்டுதிர் ⋆
வேங்கட மா மலை மேய ⋆
ஆயன் அடி அல்லது ⋆
மற்றறியேனே ॥ **1.10.8** ॥

வந்தாய் என் மனம் புகுந்தாய் ⋆
மன்னி நின்றாய் ⋆
நந்தாத கொழுஞ்சுடரே ⋆
எங்கள் நம்பீ ! ⋆
சிந்தாமணியே ⋆
திருவேங்கடம் மேய எந்தாய் ! ⋆
இனி யான் உன்னை ⋆
என்றும் விடேனே ॥ **1.10.9** ॥

‡ வில்லார் மலி ⋆
வேங்கட மா மலை மேய ⋆
மல்லார் திரள் தோள் ⋆
மணி வண்ணன் அம்மானைக் ⋆
கல்லார் திரள் தோள் ⋆
கலியன் சொன்ன மாலை ⋆

வல்லார் அவர் ⋆
வானவர் ஆகுவர் தாமே ॥ **1.10.10** ॥

## பெரிய திருமொழி – வானவர்

‡ வானவர் தங்கள் சிந்தை போல ⋆
என் நெஞ்சமே ! இனிதுவந்து ⋆
மா தவ மானவர் தங்கள் சிந்தை ⋆
அமர்ந்துறைகின்ற எந்தை ⋆
கானவர் இடு கார் அகில் புகை ⋆
ஓங்கு வேங்கடம் மேவி ⋆
மாண் குறள் ஆன அந்தணற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.1** ॥

உறவு சுற்றம் என்றொன்றிலா ⋆
ஒருவன் உகந்தவர் தம்மை ⋆
மண் மிசைப் பிறவியே கெடுப்பான் ⋆
அது கண்டென் நெஞ்சம் என்பாய் ⋆
குறவர் மாதர்களோடு ⋆
வண்டு குறிஞ்சி மருள் இசை பாடும் வேங்கடத்து ⋆
அறவ நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.2** ॥

இண்டை ஆயின கொண்டு ⋆
தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் ⋆
வானிடைக் கொண்டு போய் இடவும் ⋆
அது கண்டென் நெஞ்சம் என்பாய் ⋆
வண்டு வாழ் வட வேங்கட மலை ⋆
கோயில் கொண்டதனோடும் ⋆

மீமிசை அண்டம் ஆண்டிருப்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.3** ‖

பாவியாது செய்தாய் என் நெஞ்சமே ! ⋆
பண்டு தொண்டு செய்தாரை ⋆
மண் மிசை மேவி ஆட்கொண்டு போய் ⋆
விசும்பேற வைக்கும் எந்தை ⋆
கோவி நாயகன் கொண்டல் உந்துயர் ⋆
வேங்கட மலை ஆண்டு ⋆
வானவர் ஆவியாய் இருப்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.4** ‖

பொங்கு போதியும் பிண்டியும் உடைப் ⋆
புத்தர் நோன்பியர் பள்ளியுள் உறை ⋆
தங்கள் தேவரும் தாங்களுமே ஆக ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் ⋆
வேங்கடம் மேவி நின்றருள் ⋆
அங்கண் நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.5** ‖

துவரி ஆடையர் மட்டையர் ⋆
சமண் தொண்டர்கள் மண்டி உண்டு பின்னரும் ⋆
தமரும் தாங்களுமே தடிக்க ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
கவரி மாக் கணம் சேரும் ⋆
வேங்கடம் கோயில் கொண்ட கண் ஆர் விசும்பிடை ⋆

அமர நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.6** ‖

தருக்கினால் சமண் செய்து ⋆
சோறு தண் தயிரினால் திரளை ⋆
மிடற்றிடை நெருக்குவார் அலக்கண் அது கண்டு ⋆
என் நெஞ்சம் என்பாய் ⋆
மருட்கள் வண்டுகள் பாடும் ⋆
வேங்கடம் கோயில் கொண்டதனோடும் ⋆
வானிடை அருக்கன் மேவி நிற்பாற்கு ⋆
அடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.7** ‖

சேயன் அணியன் சிறியன் பெரியன் என்பதும் ⋆
சிலர் பேசக் கேட்டிருந்தே ⋆
என் நெஞ்சம் என்பாய் ! ⋆
எனக்கொன்று சொல்லாதே ⋆
வேய்கள் நின்று வெண் முத்தமே சொரி ⋆
வேங்கட மலை கோயில் மேவிய ⋆
ஆயர் நாயகற்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ‖ **2.1.8** ‖

கூடி ஆடி உரைத்ததே உரைத்தாய் ⋆
என் நெஞ்சம் என்பாய் ! துணிந்து கேள் ⋆
பாடி ஆடிப் பலரும் ⋆
பணிந்தேத்திக் காண்கிலார் ⋆
ஆடு தாமரையோனும் ஈசனும் ⋆
அமரர் கோனும் நின்றேத்தும் ⋆

வேங்கடத்தாடு கூத்தனுக்கு ⋆
இன்றடிமைத் தொழில் பூண்டாயே ॥ **2.1.9** ॥

‡ மின்னு மா முகில் மேவு ⋆
தண் திருவேங்கட மலை கோயில் மேவிய ⋆
அன்னமாய் நிகழ்ந்த ⋆
அமரர் பெருமானை ⋆
கன்னி மா மதிள் மங்கையர் கலிகன்றி ⋆
இன் தமிழால் உரைத்த ⋆
இம் மன்னு பாடல் வல்லார்க்கு ⋆
இடம் ஆகும் வான் உலகே ॥ **2.1.10** ॥

## பெரிய திருமொழி – பேரணிந்து

‡ அன்றிய வாணன் ஆயிரம் தோளும் துணிய ⋆
அன்றாழி தொட்டானை ⋆
மின் திகழ் குடுமி வேங்கட மலை மேல் ⋆
மேவிய வேத நல் விளக்கை ⋆
தென் திசைத்திலதம் அனையவர் நாங்கைச் ⋆
செம் பொன் செய் கோயிலின் உள்ளே ⋆
மன்றது பொலிய மகிழ்ந்து நின்றானை ⋆
வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே ॥ **4.3.8** ॥

## பெரிய திருமொழி – கண்ணார் கடல்

‡ வேடார் ⋆
திருவேங்கடம் மேய விளக்கே ⋆
நாடார் புகழ் ⋆
வேதியர் மன்னிய நாங்கூர் ⋆

சேடார் பொழில் சூழ் ⋆
திருவெள்ளக் குளத்தாய் ⋆
பாடா வருவேன் ⋆
வினை ஆயின பாற்றே ॥ **4.7.5** ॥

## பெரிய திருமொழி – வென்றிமா

வாம் பரி உக மன்னர் தம் உயிர் செக ⋆
ஐவர்கட்கரசளித்த ⋆
காம்பின் ஆர் திரு வேங்கடப் பொருப்ப ! ⋆
நின் காதலை அருள் எனக்கு ⋆
மாம் பொழில் தளிர் கோதிய மடக் குயில் ⋆
வாய் அது துவர்ப்பெய்த ⋆
தீம் பலங்கனித் தேன் அது நுகர் ⋆
திருவெள்ளறை நின்றானே ॥ **5.3.4** ॥

## பெரிய திருமொழி – வெருவாதாள்

‡ வெருவாதாள் வாய் வெருவி ⋆
வேங்கடமே ! வேங்கடமே ! என்கின்றாளால் ⋆
மருவாளால் என் குடங்கால் ⋆
வாள் நெடுங்கண் துயில் மறந்தாள் ⋆
வண்டார் கொண்டல் உருவாளன் வானவர் தம் உயிர் ஆளன் ⋆
ஒலி திரை நீர்ப் பௌவம் கொண்ட திருவாளன் ⋆
என் மகளைச் செய்தனகள் ⋆
எங்ஙனம் நான் சிந்திக்கேனே ॥ **5.5.1** ॥

## பெரிய திருமொழி – கைம்மானம்

‡ சிந்தனையைத் தவநெறியைத் ⋆
திருமாலை ⋆
பிரியாது வந்தெனது மனத்திருந்த ⋆
வடமலையை ⋆
வரி வண்டார் கொந்தணைந்த பொழிற் கோவல் ⋆
உலகளப்பான் அடி நிமிர்த்த அந்தணனை ⋆
யான் கண்டது ⋆
அணி நீர்த் தென் அரங்கத்தே ॥ **5.6.7** ॥

## பெரிய திருமொழி – மான் கொண்ட

‡ மான் கொண்ட தோல் ⋆
மார்வின் மாணி ஆய் ⋆
மாவலி மண் தான் கொண்டு ⋆
தாளால் அளந்த பெருமானை ⋆
தேன் கொண்ட சாரல் ⋆
திருவேங்கடத்தானை ⋆
நான் சென்று நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.1** ॥

## பெரிய திருமொழி – கறவா மடநாகு

தாரேன் பிறர்க்கு ⋆
உன் அருள் என்னிடை வைத்தாய் ⋆
ஆரேன் அதுவே ⋆
பருகிக் களிக்கின்றேன் ⋆
காரேய் கடலே மலையே ⋆
திருக்கோட்டி ஊரே ⋆

உகந்தாயை ⋆
உகந்தடியேனே ॥ **7.1.3** ॥

## பெரிய திருமொழி – சினவில்

ஆங்கு வெம் நரகத்தழுந்தும் போது ⋆
அஞ்சேல் என்றடியேனை அங்கே வந்து தாங்கு ⋆
தாமரை அன்ன பொன்னார் அடி எம்பிரானை ⋆
உம்பர்க்கணியாய் நின்ற ⋆
வேங்கடத்தரியைப் பரி கீறியை ⋆
வெண்ணெய் உண்டுரலின் இடை ஆப்புண்ட தீங்கரும்பினை ⋆
தேனை நன் பாலினை அன்றி ⋆
என் மனம் சிந்தை செய்யாதே ॥ **7.3.5** ॥

## பெரிய திருமொழி – பெரும்புறக்கடலை

எங்களுக்கருள் செய்கின்ற ஈசனை ⋆
வாசவார் குழலாள் மலை மங்கை தன் பங்கனைப் ⋆
பங்கில் வைத்துகந்தான் தன்னைப் ⋆
பான்மையைப் பனி மா மதியம் தவழ் ⋆
மங்குலைச் சுடரை வட மாமலை உச்சியை ⋆
நச்சி நாம் வணங்கப்படும் கங்குலை ⋆
பகலைச் சென்று நாடிக் ⋆
கண்ண மங்கையுள் கண்டு கொண்டேனே ॥ **7.10.3** ॥

## பெரிய திருமொழி – தெள்ளியீர்

‡ அருவி சோர் வேங்கடம் ⋆
நீர் மலை என்று வாய் வெருவினாள் ⋆
மெய்யம் வினவி இருக்கின்றாள் ⋆

பெருகு சீர்க் ⋆
கண்ணபுரம் என்று பேசினாள் உருகினாள் ⋆
உள் மெலிந்தாள் ⋆
இது என் கொலோ ‖ **8.2.3** ‖

வட வரை நின்றும் வந்து ⋆
இன்று கணபுரம் ⋆
இடவகை கொள்வது ⋆
யாம் என்று பேசினாள் ⋆
மடவரல் மாதர் என் பேதை ⋆
இவர்க்கிவள் கடவதென் ⋆
கண் துயில் ⋆
இன்றிவர் கொள்ளவே ‖ **8.2.6** ‖

## பெரிய திருமொழி – தந்தைதாய்

பண் உலாம் மென் மொழிப் பாவைமார் ⋆
பணைமுலை அணைதும் நாம் என்று ⋆
எண்ணுவார் எண்ணம் அதொழித்து ⋆
நீ பிழைத்துய்யக் கருதினாயேல் ⋆
விண் உளார் விண்ணின் மீதியன்ற ⋆
வேங்கடத்துளார் ⋆
வளங்கொள் முந்நீர் வண்ணனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ‖ **9.7.4** ‖

## பெரிய திருமொழி – மூவரில்

‡ வலம்புரி ஆழியனை ⋆
வரை ஆர் திரள் தோளன் தன்னை ⋆

புலம்புரி நூலவனைப் ⋆
பொழில் வேங்கட வேதியனை ⋆
சிலம்பியல் ஆறுடைய ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
நலந் திகழ் நாரணனை ⋆
நணுகுங்கொல் என் நல் நுதலே ‖ **9.9.9** ‖

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

‡ பொன்னை மா மணியை ⋆
அணி ஆர்ந்ததோர் மின்னை ⋆
வேங்கடத்துச்சியில் ⋆
கண்டு போய் ⋆
என்னை ஆளுடை ஈசனை ⋆
எம்பிரான் தன்னை ⋆
யாம் சென்று காண்டும் ⋆
தண் காவிலே ‖ **10.1.2** ‖

## பெரிய திருமொழி – புள்ளுருவாகி

மன்றில் மலிந்து கூத்து வந்தாடி ⋆
மால் விடை ஏழும் அடர்த்து ⋆
ஆயர் அன்று நடுங்க ஆனிரை காத்த ⋆
ஆண்மை கொலோ அறியேன் நான் ⋆
நின்ற பிரானே ! நீள் கடல் வண்ணா ! ⋆
நீ இவள் தன்னை நின் கோயில் ⋆
முன்றில் எழுந்த முருங்கையில் தேனா ⋆
முன் கை வளை கவர்ந்தாயே ‖ **10.9.2** ‖

## பெரிய திருமொழி – திருத்தாய்

‡ சொல்லாய் பைங்கிளியே ⋆
சுடர் ஆழி வலன் உயர்த்த ⋆
மல் ஆர் தோள் ⋆
வட வேங்கடவனை வர ⋆
சொல்லாய் பைங்கிளியே ! ‖ **10.10.5** ‖

## பெரிய திருமொழி – மன்னிலங்கு

கண்ணன் ⋆
மனத்துள்ளே நிற்கவும் ⋆
கை வளைகள் என்னோ கழன்ற ⋆
இவை என்ன மாயங்கள் ⋆
பெண் ஆனோம் ⋆
பெண்மையோம் நிற்க ⋆
அவன் மேய அண்ணல் மலையும் ⋆
அரங்கமும் பாடோமே ‖ **11.3.7** ‖

## பெரிய திருமொழி – மானமரும்

‡ கள்ளத்தால் மாவலியை ⋆
மூவடி மண் கொண்டளந்தான் ⋆
வெள்ளத்தான் வேங்கடத்தான் ⋆
என்பரால் காண் ஏடீ ⋆
வெள்ளத்தான் ⋆
வேங்கடத்தானேலும் ⋆
கலிகன்றி உள்ளத்தின் உள்ளே ⋆
உளன் கண்டாய் சாழலே ‖ **11.5.10** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருக்குறுந்தாண்டகம்

இம்மையை மறுமை தன்னை ⋆
எமக்கு வீடாகி நின்ற ⋆
மெய்ம்மையை விரிந்த சோலை ⋆
வியன் திருவரங்கம் மேய ⋆
செம்மையைக் கருமை தன்னைத் ⋆
திருமலை ஒருமையானை ⋆
தன்மையை நினைவார் என்தன் ⋆
தலைமிசை மன்னுவாரே ‖ **7** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ நீரகத்தாய் ! நெடுவரையின் உச்சி மேலாய் ! ⋆
நிலாத்திங்கள் துண்டத்தாய் ! நிறைந்த கச்சி ஊரகத்தாய் ⋆
ஒண் துறை நீர் வெஃகா உள்ளாய் ! ⋆
உள்ளுவார் உள்ளத்தாய் ⋆
உலகம் ஏத்தும் காரகத்தாய் ! கார்வானத்துள்ளாய் ! கள்வா ! ⋆
காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு பேரகத்தாய் ⋆
பேராதென் நெஞ்சின் உள்ளாய் ! ⋆
பெருமான் உன் திருவடியே பேணினேனே ‖ **8** ‖

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர் மல்லையாய் ! ⋆
மதிள் கச்சி ஊராய் ! பேராய் ⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன் ⋆
குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான் ⋆
பங்கத்தாய் ! பாற்கடலாய் ! பாரின் மேலாய் ! ⋆
பனி வரையின் உச்சியாய் ! பவள வண்ணா ⋆

எங்குற்றாய் எம் பெருமான் ! உன்னை நாடி ⋆
ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே ! ‖ **9** ‖

பொன் ஆனாய் ! பொழில் ஏழும் காவல் பூண்ட புகழ் ஆனாய் ! ⋆
இகழ்வாய தொண்டனேன் நான் ⋆
என் ஆனாய் என் ஆனாய் என்னல் அல்லால் ⋆
என் அறிவன் ஏழையேன் ⋆
உலகம் ஏத்தும் தென் ஆனாய் வட ஆனாய் குடபால் ஆனாய் ⋆
குணபால மதயானாய் இமையோர்க்கென்றும் முன் ஆனாய் ⋆
பின் ஆனார் வணங்கும் சோதி ! ⋆
திருமூழிக் களத்தானாய் முதல் ஆனாயே ! ‖ **10** ‖

‡ கன்று மேய்த்தினிதுகந்த காளாய் ! என்றும் ⋆
கடி பொழில் சூழ் கணபுரத்தென் கனியே ! என்றும் ⋆
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் ! என்றும் ⋆
வட திருவேங்கடம் மேய மைந்தா ! என்றும் ⋆
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே ! என்றும் ⋆
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய் ! என்றும் ⋆
துன்று குழல் கரு நிறத்தென் துணையே என்றும் ⋆
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே ! ‖ **16** ‖

## திருவாய்மொழி – ஓடும்புல்

கண்ணாவான் என்றும் ⋆
மண்ணோர் விண்ணோர்க்கு ⋆
தண்ணார் வேங்கட ⋆
விண்ணோர் வெற்பனே ‖ **1.8.3** ‖

## திருவாய்மொழி – வாயும் திரை

கடலும் மலையும் ⋆
விசும்பும் துழாய் எம் போல் ⋆
சுடர் கொள் இராப் பகல் ⋆
துஞ்சாயால் தண் வாடாய் ⋆
அடல் கொள் படை ஆழி ⋆
அம்மானைக் காண்பான் நீ ⋆
உடலம் நோய் உற்றாயோ ⋆
ஊழிதோறூழியே ‖ **2.1.4** ‖

## திருவாய்மொழி – வைகுந்தா

எந்தாய் ! தண் திருவேங்கடத்துள் நின்றாய் ⋆
இலங்கை செற்றாய் ⋆
மராமரம் பைந்தாள் ஏழ் உருவ ⋆
ஒரு வாளி கோத்த வில்லா ⋆
கொந்தார் தண்ணந் துழாயினாய் அமுதே ⋆
உன்னை என் உள்ளே குழைத்த எம் மைந்தா ⋆
வான் ஏறே ⋆
இனி எங்குப் போகின்றதே ‖ **2.6.9** ‖

போகின்ற காலங்கள் போய காலங்கள் ⋆
போகு காலங்கள் ⋆
தாய் தந்தை உயிர் ஆகின்றாய் ⋆
உன்னை நான் அடைந்தேன் விடுவேனோ ⋆
பாகின்ற தொல் புகழ் மூவுலகுக்கும் ⋆
நாதனே ! பரமா ⋆

தண் வேங்கடம் மேகின்றாய் ⋆
தண் துழாய் விரை நாறு கண்ணியனே ‖ **2.6.10** ‖

## திருவாய்மொழி – கேசவன் தமர்

பற்பநாபன் உயர்வற உயரும் ⋆
பெரும் திறலோன் ⋆
எற்பரன் என்னை ஆக்கிக் கொண்டு ⋆
எனக்கே தன்னைத் தந்த கற்பகம் ⋆
என் அமுதம் கார் முகில் போலும் ⋆
வேங்கட நல் வெற்பன் ⋆
விசும்போர் பிரான் ⋆
எந்தை தாமோதரனே ‖ **2.7.11** ‖

## திருவாய்மொழி – ஒழிவில் காலம்

‡ ஒழிவில் காலம் எல்லாம் ⋆
உடனாய் மன்னி ⋆
வழுவிலா அடிமை ⋆
செய்ய வேண்டும் நாம் ⋆
தெழி குரல் அருவித் ⋆
திருவேங்கடத்து ⋆
எழில் கொள் சோதி ⋆
எந்தை தந்தை தந்தைக்கே ‖ **3.3.1** ‖

எந்தை தந்தை தந்தை ⋆
தந்தை தந்தைக்கும் முந்தை ⋆
வானவர் ⋆
வானவர் கோனொடும் ⋆

சிந்து பூ மகிழும் ⋆
திருவேங்கடத்து ⋆
அந்த மில் புகழ்க் ⋆
கார் எழில் அண்ணலே ॥ **3.3.2** ॥

அண்ணல் மாயன் ⋆
அணி கொள் செந்தாமரைக்கண்ணன் ⋆
செங்கனி வாய்க் ⋆
கருமாணிக்கம் ⋆
தெண்ணிறைச் சுனை நீர்த் ⋆
திருவேங்கடத்து ⋆
எண்ணில் தொல் புகழ் ⋆
வானவர் ஈசனே ॥ **3.3.3** ॥

ஈசன் வானவர்க்கு ⋆
என்பன் என்றால் ⋆
அது தேசமோ ⋆
திருவேங்கடத் தானுக்கு ⋆
நீசனேன் ⋆
நிறைவொன்றும் இலேன் ⋆
என் கண் பாசம் வைத்த ⋆
பரஞ்சுடர்ச் சோதிக்கே ॥ **3.3.4** ॥

சோதியாகி ⋆
எல்லா உலகும் தொழும் ⋆
ஆதி மூர்த்தி என்றால் ⋆
அளவாகுமோ ⋆
வேதியர் ⋆

முழு வேதத்தமுதத்தை ⋆
தீதில் சீர்த் ⋆
திருவேங்கடத் தானையே ‖ **3.3.5** ‖

வேங்கடங்கள் ⋆
மெய்ம்மேல் வினை முற்றவும் ⋆
தாங்கள் தங்கட்கு ⋆
நல்லனவே செய்வார் ⋆
வேங்கடத்துறை வார்க்கு ⋆
நமவென்னலாம் கடமை ⋆
அதுசுமந்தார்கட்கே ‖ **3.3.6** ‖

சுமந்து மாமலர் ⋆
நீர் சுடர் தூபம் கொண்டு ⋆
அமர்ந்து வானவர் ⋆
வானவர் கோனொடும் ⋆
நமன்றெழும் ⋆
திருவேங்கடம் நங்கட்கு ⋆
சமன் கொள் வீடு தரும் ⋆
தடங்குன்றமே ‖ **3.3.7** ‖

‡ குன்றம் ஏந்திக் ⋆
குளிர் மழை காத்தவன் ⋆
அன்று ஞாலம் ⋆
அளந்த பிரான் ⋆
பரன் சென்று சேர் ⋆
திருவேங்கட மா மலை ⋆

ஒன்றுமே தொழ ⋆
நம் வினை ஓயுமே ॥ **3.3.8** ॥

ஓயும் மூப்புப் ⋆
பிறப்பிறப்புப்பிணி ⋆
வீயுமாறு செய்வான் ⋆
திருவேங்கடத்தாயன் ⋆
நாள் மலராம் ⋆
அடித் தாமரை ⋆
வாய் உள்ளும் மனத்துள்ளும் ⋆
வைப்பார்கட்கே ॥ **3.3.9** ॥

வைத்த நாள் வரை ⋆
எல்லை குறுகிச் சென்று ⋆
எய்த்திளைப்பதன் முன்னம் ⋆
அடைமினோ ! ⋆
பைத்த பாம்பணையான் ⋆
திருவேங்கடம் ⋆
மொய்த்த சோலை ⋆
மொய் பூந் தடம் தாழ்வரே ॥ **3.3.10** ॥

‡ தாள் பரப்பி ⋆
மண் தாவிய ஈசனை ⋆
நீள் பொழில் ⋆
குருகூர்ச் சடகோபன் சொல் ⋆
கேழில் ஆயிரத்து ⋆
இப்பத்தும் வல்லவர் ⋆

வாழ்வர் வாழ்வெய்தி ⋆
ஞாலம் புகழவே ‖ **3.3.11** ‖

## திருவாய்மொழி – மொய்ம்மாம்

வார் புனல் அந்தண் அருவி ⋆
வட திருவேங்கடத்தெந்தை ⋆
பேர் பல சொல்லிப் பிதற்றிப் ⋆
பித்தர் என்றே பிறர் கூற ⋆
ஊர் பல புக்கும் புகாதும் ⋆
உலோகர் சிரிக்க நின்றாடி ⋆
ஆர்வம் பெருகிக் குனிப்பார் ⋆
அமரர் தொழப்படுவாரே ‖ **3.5.8** ‖

## திருவாய்மொழி – சொன்னால்

‡ சொன்னால் விரோதம் இது ⋆
ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ ⋆
என் நாவில் இன் கவி ⋆
யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன் ⋆
தென்னா தெனாவென்று ⋆
வண்டு முரல் திருவேங்கடத்து ⋆
என்னானை என்னப்பன் ⋆
எம் பெருமான் உளன் ஆகவே ‖ **3.9.1** ‖

## திருவாய்மொழி – வீற்றிருந்து

‡ மாரி மாறாத தண்ணம் மலை ⋆
வேங்கடத்தண்ணலை ⋆
வாரி மாறாத பைம் பூம் பொழில் சூழ் ⋆

குருகூர் நகர் ⋆
காரி மாறன் சடகோபன் ⋆
சொல் ஆயிரத்திப்பத்தால் ⋆
வேரி மாறாத பூமேல் இருப்பாள் ⋆
வினை தீர்க்குமே ‖ **4.5.11** ‖

## திருவாய்மொழி – பிறந்தவாறும்

நின்ற ஆறும் இருந்த ஆறும் ⋆
கிடந்த ஆறும் நினைப்பரியன ⋆
ஒன்றலா உருவாய் ⋆
அருவாய நின் மாயங்கள் ⋆
நின்று நின்று நினைகின்றேன் ⋆
உன்னை எங்ஙனம் நினைகிற்பன் ⋆
பாவியேற்கொன்று நன்குரையாய் ⋆
உலகம் உண்ட ஒண் சுடரே ! ‖ **5.10.6** ‖

## திருவாய்மொழி – மாலுக்கு

‡ மாலுக்கு ⋆
வையம் அளந்த மணாளற்கு ⋆
நீலக் கரு நிற ⋆
மேக நியாயற்கு ⋆
கோலச் செந்தாமரைக் ⋆
கண்ணற்கு ⋆
என் கொங்கலர் ஏலக் குழலி ⋆
இழந்தது சங்கே ‖ **6.6.1** ‖

சங்கு வில் வாள் தண்டு ⋆
சக்கரக் கையற்கு ⋆
செங்கனி வாய்ச் ⋆
செய்ய தாமரை கண்ணற்கு ⋆
கொங்கலர் தண்ணந் துழாய் ⋆
முடியானுக்கு ⋆
என் மங்கை இழந்தது ⋆
மாமை நிறமே ‖ **6.6.2** ‖

நிறம் கரியானுக்கு ⋆
நீடுலகுண்ட ⋆
திறங்கிளர் வாய்ச் ⋆
சிறுக் கள்ளன் அவற்கு ⋆
கறங்கிய சக்கரக் ⋆
கையவனுக்கு ⋆
என் பிறங்கிரும் கூந்தல் ⋆
இழந்தது பீடே ‖ **6.6.3** ‖

பீடுடை நான்முகனைப் ⋆
படைத்தானுக்கு ⋆
மாடுடை வையம் ⋆
அளந்த மணாளற்கு ⋆
நாடுடை மன்னர்க்குத் ⋆
தூது செல் நம்பிக்கு ⋆
என் பாடுடை அல்குல் ⋆
இழந்தது பண்பே ‖ **6.6.4** ‖

பண்புடை வேதம் ⋆
பயந்த பரனுக்கு ⋆
மண் புரை வையம் ⋆
இடந்த வராகற்கு ⋆
தெண் புனல் பள்ளி ⋆
எம் தேவ பிரானுக்கு ⋆
என் கண் புனை கோதை ⋆
இழந்தது கற்பே ‖ **6.6.5** ‖

கற்பகக் காவன ⋆
நற்பல தோளற்கு ⋆
பொற்சுடர்க் குன்றன்ன ⋆
பூந் தண் முடியற்கு ⋆
நற்பல தாமரை ⋆
நாள் மலர்க் கையற்கு ⋆
என் வில் புருவக் கொடி ⋆
தோற்றது மெய்யே ‖ **6.6.6** ‖

மெய்யமர் பல் கலன் ⋆
நன்கணிந்தானுக்கு ⋆
பை அரவின் அணைப் ⋆
பள்ளியினானுக்கு ⋆
கையொடு கால் செய்ய ⋆
கண்ண பிரானுக்கு ⋆
என் தையல் இழந்தது ⋆
தன்னுடைச் சாயே ‖ **6.6.7** ‖

சாயக் குருந்தம் ⋆
ஒசித்த தமியற்கு ⋆
மாயச் சகடம் ⋆
உதைத்த மணாளற்கு ⋆
பேயைப் பிணம் படப் ⋆
பால் உண் பிரானுக்கு ⋆
என் வாசக் குழலி ⋆
இழந்தது மாண்பே ॥ **6.6.8** ॥

மாண்பமை கோலத்து ⋆
எம் மாயக் குறளற்கு ⋆
சேண் சுடர்க் குன்றன்ன ⋆
செஞ்சுடர் மூர்த்திக்கு ⋆
காண் பெரும் தோற்றத்து ⋆
எம் காகுத்த நம்பிக்கு ⋆
என் பூண் புனை மென்முலை ⋆
தோற்றது பொற்பே ॥ **6.6.9** ॥

பொற்பமை நீள் முடிப் ⋆
பூந் தண் துழாயற்கு ⋆
மற்பொரு தோள் உடை ⋆
மாயப் பிரானுக்கு ⋆
நிற்பன பல் உருவாய் ⋆
நிற்கு மாயற்கு ⋆
என் கற்புடை ஆட்டி ⋆
இழந்தது கட்டே ॥ **6.6.10** ॥

‡ கட்டெழில் சோலை ⋆
நல் வேங்கட வாணனை ⋆
கட்டெழில் தென் குருகூர்ச் ⋆
சடகோபன் சொல் ⋆
கட்டெழில் ஆயிரத்து ⋆
இப்பத்தும் வல்லவர் ⋆
கட்டெழில் வானவர் ⋆
போகம் உண்பாரே ॥ **6.6.11** ॥

## திருவாய்மொழி – உலகம் உண்ட

‡ உலகம் உண்ட பெருவாயா ! ⋆
உலப்பில் கீர்த்தி அம்மானே ⋆
நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி ! ⋆
நெடியாய் ! அடியேன் ஆர் உயிரே ⋆
திலதம் உலகுக்காய் நின்ற ⋆
திருவேங்கடத்தெம் பெருமானே ⋆
குல தொல் அடியேன் உன பாதம் ⋆
கூடும் ஆறு கூறாயே ॥ **6.10.1** ॥

கூறாய் நீறாய் நிலன் ஆகிக் ⋆
கொடு வல் அசுரர் குலம் எல்லாம் ⋆
சீறா எறியும் திரு நேமி வலவா ! ⋆
தெய்வக் கோமானே ⋆
சேறார் சுனைத் தாமரை செந்தீ மலரும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
ஆறா அன்பில் அடியேன் ⋆
உன் அடிசேர் வண்ணம் அருளாயே ॥ **6.10.2** ॥

வண்ண மருள் கொள் அணி மேக வண்ணா ! ⋆
மாய அம்மானே ⋆
எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதே ! ⋆
இமையோர் அதிபதியே ⋆
தெண்ணல் அருவி மணி பொன் முத்தலைக்கும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
அண்ணலே ! உன் அடிசேர ⋆
அடியேற்காவா என்னாயே ! ‖ **6.10.3** ‖

ஆவா என்னாதுலகத்தை அலைக்கும் ⋆
அசுரர் வாணாள் மேல் ⋆
தீவாய் வாளி மழை பொழிந்த சிலையா ! ⋆
திரு மா மகள் கேள்வா தேவா ⋆
சுரர்கள் முனிக் கணங்கள் விரும்பும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
பூவார் கழல்கள் அருவினையேன் ⋆
பொருந்தும் ஆறு புணராயே ‖ **6.10.4** ‖

புணரா நின்ற மரம் ஏழ் ⋆
அன்றெய்த ஒரு வில் வலவாவோ ⋆
புணர் ஏய் நின்ற மரம் இரண்டின் ⋆
நடுவே போன முதல்வாவோ ⋆
திணர் ஆர் மேகம் எனக் களிறு சேரும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
திணர் ஆர் சார்ங்கத்துன பாதம் ⋆
சேர்வதடியேன் எந்நாளே ‖ **6.10.5** ‖

எந்நாளே நாம் மண் அளந்த ⋆
இணைத் தாமரைகள் காண்பதற்கென்று ⋆
எந்நாளும் நின்றிமையோர்கள் ஏத்தி ⋆
இறைஞ்சி இனம் இனமாய் ⋆
மெய்ந் நா மனத்தால் வழி பாடு செய்யும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
மெய்ந் நான் எய்தி எந்நாள் ⋆
உன் அடிக் கண் அடியேன் மேவுவதே ‖ **6.10.6** ‖

அடியேன் மேவி அமர்கின்ற அமுதே ! ⋆
இமையோர் அதிபதியே ⋆
கொடியா அடு புள் உடையானே ! ⋆
கோலக் கனிவாய்ப் பெருமானே ⋆
செடி ஆர் வினைகள் தீர் மருந்தே ! ⋆
திருவேங்கடத்தெம் பெருமானே ⋆
நொடி ஆர் பொழுதும் உன பாதம் ⋆
காண நோலாதாற்றேனே ‖ **6.10.7** ‖

நோலாதாற்றேன் உன பாதம் ⋆
காணவென்று நுண் உணர்வின் ⋆
நீல் ஆர் கண்டத்தம்மானும் ⋆
நிறை நான்முகனும் இந்திரனும் ⋆
சேல் ஏய் கண்ணார் பலர் சூழ விரும்பும் ⋆
திருவேங்கடத்தானே ⋆
மால் ஆய் மயக்கி அடியேன் பால் ⋆
வந்தாய் போலே வாராயே ‖ **6.10.8** ‖

வந்தாய் போலே வாராதாய் !⋆
வாராதாய் போல் வருவானே⋆
செந் தாமரைக் கண் செங்கனி வாய்⋆
நால் தோள் அமுதே ! எனதுயிரே⋆
சிந்தா மணிகள் பகர் அல்லைப் பகல் செய்⋆
திருவேங்கடத்தானே⋆
அந்தோ ! அடியேன் உன பாதம்⋆
அகலகில்லேன் இறையுமே ‖ **6.10.9** ‖

‡ அகலகில்லேன் இறையும் என்று⋆
அலர்மேல் மங்கை உறை மார்பா⋆
நிகரில் புகழாய் ! உலகம் மூன்றுடையாய் !⋆
என்னை ஆள்வானே⋆
நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும்⋆
திருவேங்கடத்தானே⋆
புகல் ஒன்றில்லா அடியேன்⋆
உன் அடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே ‖ **6.10.10** ‖

‡ அடிக் கீழ் அமர்ந்து புகுந்து⋆
அடியீர் ! வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்⋆
படிக்கேழ் இல்லாப் பெருமானைப்⋆
பழனக் குருகூர்ச் சடகோபன்⋆
முடிப்பான் சொன்ன ஆயிரத்துத்⋆
திருவேங்கடத்துக்கிவை பத்தும்⋆
பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து⋆
பெரிய வானுள் நிலாவுவரே ‖ **6.10.11** ‖

## திருவாய்மொழி – நங்கள் வரிவளை

‡ நங்கள் வரிவளை ஆயங்காளோ ⋆
நம்முடை ஏதலர் முன்பு நாணி ⋆
நுங்கட்கு யான் ஒன்றுரைக்கும் மாற்றம் ⋆
நோக்குகின்றேன் எங்கும் காண மாட்டேன் ⋆
சங்கம் சரிந்தன சாய் இழந்தேன் ⋆
தட முலை பொன் நிறமாய்த் தளர்ந்தேன் ⋆
வெங்கண் பறவையின் பாகன் எங்கோன் ⋆
வேங்கட வாணனை வேண்டிச் சென்றே ‖ **8.2.1** ‖

இடை இல்லை யான் வளர்த்த கிளிகாள் ⋆
பூவைகாள் ! குயில்காள் ! மயில்காள் ⋆
உடைய நம் மாமையும் சங்கும் நெஞ்சும் ⋆
ஒன்றும் ஒழிய ஒட்டாது கொண்டான் ⋆
அடையும் வைகுந்தமும் பாற்கடலும் ⋆
அஞ்சன வெற்பும் அவை நணிய ⋆
கடையறப் பாசங்கள் விட்ட பின்னை அன்றி ⋆
அவன் அவை காண் கொடானே ‖ **8.2.8** ‖

## திருவாய்மொழி – ஓராயிரமாய்

இன்றிப் போக ⋆
இரு வினையும் கெடுத்து ⋆
ஒன்றி யாக்கை புகாமை ⋆
உய்யக் கொள்வான் ⋆
நின்ற வேங்கடம் ⋆
நீள் நிலத்துள்ளது ⋆

சென்று தேவர்கள் ⋆
கை தொழுவார்களே ॥ **9.3.8** ॥

## திருவாய்மொழி – சார்வே தவநெறி

தலைமேல் புனைந்தேன் ⋆
சரணங்கள் ⋆
ஆலின் இலைமேல் துயின்றான் ⋆
இமையோர் வணங்க ⋆
மலைமேல் தான் நின்று ⋆
என் மனத்துள் இருந்தானை ⋆
நிலை பேர்க்கல் ஆகாமை ⋆
நிச்சித்திருந்தேனே ॥ **10.4.4** ॥

## திருவாய்மொழி – கண்ணன் கழலிணை

‡ மேயான் வேங்கடம் ⋆
காயா மலர் வண்ணன் ⋆
பேயார் முலை உண்ட ⋆
வாயான் மாதவனே ॥ **10.5.6** ॥

## திருவாய்மொழி – செஞ்சொற்கவிகாள்

‡ திருமாலிருஞ்சோலை மலையே ⋆
திருப்பாற்கடலே என் தலையே ⋆
திருமால் வைகுந்தமே ⋆
தண் திருவேங்கடமே எனதுடலே ⋆
அரு மா மாயத்தெனதுயிரே ⋆
மனமே வாக்கே கருமமே ⋆

ஒரு மா நொடியும் பிரியான் ⋆
என் ஊழி முதல்வன் ஒருவனே ॥ **10.7.8** ॥

## பொய்கையாழ்வார் அருளிச்செய்த – முதல் திருவந்தாதி

எழுவார் விடை கொள்வார் ⋆
ஈன் துழாயானை ⋆
வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார் ⋆
வினைச் சுடரை நந்துவிக்கும் ⋆
வேங்கடமே ⋆
வானோர் மனச் சுடரைத் தூண்டும் மலை ॥ **26** ॥

வகை அறு நுண் கேள்வி ⋆
வாய்வார்கள் ⋆
நாளும் புகை விளக்கும் பூம் புனலும் ஏந்தி ⋆
திசை திசையின் வேதியர்கள் ⋆
சென்றிறைஞ்சும் வேங்கடமே ⋆
வெண் சங்கம் ஊதிய வாய் மால் உகந்த ஊர் ॥ **37** ॥

ஊரும் வரி அரவம் ⋆
ஒண் குறவர் மால் யானை ⋆
பேர எறிந்த பெரு மணியை ⋆
கார் உடைய மின் என்று ⋆
புற்றடையும் வேங்கடமே ⋆
மேல் அசுரர் என்னென்ற மாலதிடம் ॥ **38** ॥

இடந்தது பூமி ⋆
எடுத்தது குன்றம் ⋆
கடந்தது கஞ்சனை முன் அஞ்ச ⋆

கிடந்ததுவும் நீர் ஓத மா கடலே ⋆
நின்றதுவும் வேங்கடமே ⋆
பேர் ஓத வண்ணர் பெரிது ॥ **39** ॥

பெரு வில் பகழிக் ⋆
குறவர் கைச் செந்தீ ⋆
வெருவிப் புனம் துறந்த வேழம் ⋆
இரு விசும்பில் மீன் வீழக் ⋆
கண்டஞ்சும் வேங்கடமே ⋆
மேல் அசுரர் கோன் வீழக் கண்டுகந்தான் குன்று ॥ **40** ॥

உணர்வார் ஆர் உன் பெருமை ⋆
ஊழிதோறூழி ⋆
உணர்வார் ஆர் உன் உருவம் தன்னை ⋆
உணர்வார் ஆர் விண்ணகத்தாய் ! மண்ணகத்தாய் ! ⋆
வேங்கடத்தாய் ! ⋆
நால்வேதப் பண்ணகத்தாய் ! நீ கிடந்த பால் ॥ **68** ॥

வழி நின்று ⋆
நின்னைத் தொழுவார் ⋆
வழுவா மொழி நின்ற ⋆
மூர்த்தியரே ஆவர் ⋆
பழுதொன்றும் வாராத வண்ணமே ⋆
விண் கொடுக்கும் ⋆
மண் அளந்த சீரான் திருவேங்கடம் ॥ **76** ॥

வேங்கடமும் ⋆
விண்ணகரும் வெஃகாவும் ⋆
அஃகாத பூங்கிடங்கின் ⋆

நீள் கோவல் பொன் நகரும் ⋆
நான்கிடத்தும் நின்றான் இருந்தான் ⋆
கிடந்தான் நடந்தானே ⋆
என்றால் கெடுமாம் இடர் ‖ **77** ‖

படை ஆரும் வாட் கண்ணார் ⋆
பாரசி நாள் ⋆
பைம் பூந் தொடையலோடேந்திய தூபம் ⋆
இடை இடையில் மீன் மாய ⋆
மாசூணும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் மான் மாயவெய்தான் வரை ‖ **82** ‖

‡ உளன் கண்டாய் நன்னெஞ்சே ! ⋆
உத்தமன் என்றும் உளன் கண்டாய் ⋆
உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய் ⋆
வெள்ளத்தின் உள்ளானும் ⋆
வேங்கடத்து மேயானும் ⋆
உள்ளத்தின் உள்ளான் என்றோர் ‖ **99** ‖

## பூதத்தாழ்வார் அருளிச்செய்த – இரண்டாம் திருவந்தாதி

சென்றதிலங்கைமேல் ⋆
செவ்வே தன் சீற்றத்தால் ⋆
கொன்றதிராவணனைக் கூறுங்கால் ⋆
நின்றதுவும் வேய் ஓங்கு தண் சாரல் ⋆
வேங்கடமே ⋆
விண்ணவர் தம் வாய் ஓங்கு தொல் புகழான் வந்து ‖ **25** ‖

வந்தித்தவனை ⋆
வழி நின்ற ஐம் பூதம் ⋆
ஐந்தும் அகத்தடக்கி ஆர்வமாய் ⋆
உந்திப் படி அமரர் வேலையான் ⋆
பண்டமரர்க்கீந்த ⋆
படி அமரர் வாழும் பதி ‖ **26** ‖

பதி அமைந்துநாடிப் ⋆
பருத்தெழுந்த சிந்தை ⋆
மதி உரிஞ்சி வான் முகடு நோக்கி ⋆
கதி மிகுத்தம் கோல் தேடி ஓடும் ⋆
கொழுந்ததே போன்றதே ⋆
மால் தேடி ஓடும் மனம் ‖ **27** ‖

மனத்துள்ளான் வேங்கடத்தான் ⋆
மா கடலான் ⋆
மற்றும் நினைப்பரிய ⋆
நீள் அரங்கத்துள்ளான் ⋆
எனைப் பலரும் தேவாதி தேவன் ⋆
எனப்படுவான் ⋆
முன் ஒரு நாள் மா வாய் பிளந்த மகன் ‖ **28** ‖

துணிந்தது சிந்தை ⋆
துழாய் அலங்கல் ⋆
அங்கம் அணிந்தவன் பேர் உள்ளத்துப் பல்கால் ⋆
பணிந்ததுவும் வேய் பிறங்கு சாரல் ⋆
விறல் வேங்கடவனையே ⋆
வாய் திறங்கள் சொல்லும் வகை ‖ **33** ‖

உளதென்றிறுமாவார் ⋆
உண்டில்லை என்று ⋆
தளர்தல் அதன் அருகுஞ்சாரார் ⋆
அளவரிய வேதத்தான் வேங்கடத்தான் ⋆
விண்ணோர் முடி தோயும் ⋆
பாதத்தான் பாதம் பயின்று ‖ **45** ‖

பயின்றதரங்கம் திருக்கோட்டி ⋆
பன்னாள் பயின்றதுவும் ⋆
வேங்கடமே பன்னாள் ⋆
பயின்றதணி திகழும் சோலை ⋆
அணி நீர் மலையே ⋆
மணி திகழும் வண் தடக்கை மால் ‖ **46** ‖

நெறியார் குழல் கற்றை ⋆
முன் நின்று பின் தாழ்ந்து ⋆
அறியாதிளங்கிரி என்றெண்ணி ⋆
பிறியாது பூங்கொடிக்கள் வைகும் ⋆
பொரு புனல் குன்றென்றும் ⋆
வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு ‖ **53** ‖

வெற்பென்றிருஞ்சோலை ⋆
வேங்கடம் என்றிவ்விரண்டும் ⋆
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் ⋆
நிற்பென்று உளம் கோயில் ⋆
உள்ளம் வைத்துள்ளினேன் ⋆
வெள்ளத்திளங்கோயில் கைவிடேல் என்று ‖ **54** ‖

போதறிந்து வானரங்கள் ⋆
பூஞ்சுனை புக்கு ⋆
ஆங்கலர்ந்த போதரிந்து கொண்டேத்தும் போது ⋆
உள்ளம் போது மணி வேங்கடவன் ⋆
மலர் அடிக்கே செல்ல ⋆
அணி வேங்கடவன் பேர் ஆய்ந்து ॥ **72** ॥

பெருகு மத வேழம் ⋆
மாப் பிடிக்கு முன் நின்று ⋆
இரு கண் இள மூங்கில் வாங்கி ⋆
அருகிருந்த தேன் கலந்து நீட்டும் ⋆
திரு வேங்கடம் கண்டீர் ⋆
வான் கலந்த வண்ணன் வரை ॥ **75** ॥

## பேயாழ்வார் அருளிச்செய்த – மூன்றாம் திருவந்தாதி

மாற்பால் மனம் சுழிப்ப ⋆
மங்கையர் தோள் கைவிட்டு ⋆
நூற்பால் மனம் வைக்க நொய்விதாம் ⋆
நால் பால வேதத்தான் வேங்கடத்தான் ⋆
விண்ணோர் முடிதோயும் ⋆
பாதத்தான் பாதம் பணிந்து ॥ **14** ॥

சிறந்த என் சிந்தையும் ⋆
செங்கண் அரவும் ⋆
நிறைந்த சீர் நீள் கச்சி உள்ளும் ⋆
உறைந்ததுவும் வேங்கடமும் வெஃகாவும் ⋆
வேளுக்கைப் பாடியுமே ⋆
தாம் கடவார் தண் துழாயார் ॥ **26** ॥

சேர்ந்த திருமால் ⋆
கடல் குடந்தை வேங்கடம் ⋆
நேர்ந்த என் சிந்தை நிறை விசும்பும் ⋆
வாய்ந்த மறை பாடகம் அனந்தன் ⋆
வண் துழாய்க் கண்ணி ⋆
இறைபாடி ஆய இவை ‖ **30** ‖

பாற்கடலும் வேங்கடமும் ⋆
பாம்பும் பனி விசும்பும் ⋆
நூற் கடலும் நுண் நூல தாமரை மேல் ⋆
பாற்பட்டிருந்தார் மனமும் ⋆
இடமாகக் கொண்டான் ⋆
குருந்தொசித்த கோபாலகன் ‖ **32** ‖

இறை ஆய் நிலன் ஆகி ⋆
எண் திசையும் தானாய் ⋆
மறையாய் மறைப் பொருளாய் வானாய் ⋆
பிறை வாய்ந்த வெள்ளத்தருவி ⋆
விளங்கொலி நீர் வேங்கடத்தான் ⋆
உள்ளத்தின் உள்ளே உளன் ‖ **39** ‖

உளன் கண்டாய் நன்னெஞ்சே ! ⋆
உத்தமன் என்றும் உளன் கண்டாய் ⋆
உள்ளுவார் உள்ளத்துளன் கண்டாய் ⋆
விண் ஒடுங்கக் கோடுயரும் ⋆
வீங்கருவி வேங்கடத்தான் ⋆
மண் ஒடுங்கத் தான் அளந்த மன் ‖ **40** ‖

புரிந்து மத வேழம் ⋆
மாப் பிடியோடூடி ⋆
திரிந்து சினத்தால் பொருது ⋆
விரிந்த சீர் வெண் கோட்டு ⋆
முத்துதிர்க்கும் வேங்கடமே ⋆
மேல் ஒருநாள் மண் கோட்டுக் கொண்டான் மலை ॥ **45** ॥

தெளிந்த சிலாதலத்தின் ⋆
மேல் இருந்த மந்தி ⋆
அளிந்த கடுவனையே நோக்கி ⋆
விளங்கிய வெண் மதியம் ⋆
தா என்னும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் மண் மதியில் கொண்டுகந்தான் வாழ்வு ॥ **58** ॥

‡ பண்டெல்லாம் வேங்கடம் ⋆
பாற்கடல் வைகுந்தம் ⋆
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் ⋆
வண்டு வளம் கிளரும் நீள் சோலை ⋆
வண் பூங்கடிகை ⋆
இளங்குமரன் தன் விண்ணகர் ॥ **61** ॥

விண்ணகரம் வெஃகா ⋆
விரி திரை நீர் வேங்கடம் ⋆
மண் நகரம் மா மாட வேளுக்கை ⋆
மண்ணகத்த தென் குடந்தை ⋆
தேன் ஆர் திருவரங்கம் தென்கோட்டி ⋆
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு ॥ **62** ॥

தாழ் சடையும் நீள் முடியும் ⋆
ஒண் மழுவும் சக்கரமும் ⋆
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால் ⋆
சூழும் திரண்டருவி பாயும் ⋆
திருமலை மேல் எந்தைக்கு ⋆
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து ‖ **63** ‖

பார்த்த கடுவன் ⋆
சுனை நீர் நிழல் கண்டு ⋆
பேர்த்தோர் கடுவன் எனப் பேர்ந்து ⋆
கார்த்த களங்கனிக்குக் ⋆
கை நீட்டும் வேங்கடமே ⋆
மேல் நாள் விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு ‖ **68** ‖

வெற்பென்று ⋆
வேங்கடம் பாடும் ⋆
வியன் துழாய்க் கற்பென்று சூடும் ⋆
கருங்குழல் மேல் ⋆
மல் பொன்ற நீண்ட தோள் மால் கிடந்த ⋆
நீள் கடல் நீர் ஆடுவான் ⋆
பூண்ட நாள் எல்லாம் புகும் ‖ **69** ‖

புகு மதத்தால் ⋆
வாய் பூசிக் கீழ் தாழ்ந்து ⋆
அருவி உகு மதத்தால் ⋆
கால் கழுவிக் கையால் ⋆
மிகு மதத் தேன் விண்ட மலர் கொண்டு ⋆

விறல் வேங்கடவனையே ⋆
கண்டு வணங்கும் களிறு ॥ **70** ॥

களிறு முகில் குத்தக் ⋆
கை எடுத்தோடி ⋆
ஒளிறு மருப்பொசி கை யாளி பிளிறி விழ ⋆
கொன்று நின்றதிரும் ⋆
வேங்கடமே ⋆
மேல்நாள் குழக் கன்று கொண்டெறிந்தான் குன்று ॥ **71** ॥

குன்றொன்றின் ஆய ⋆
குற மகளிர் கோல் வளைக் கை ⋆
சென்று விளையாடும் தீங்கழை போய் ⋆
வென்று விளங்கு மதி கோள் விடுக்கும் ⋆
வேங்கடமே ⋆
மேலை இளங்குமரர் கோமான் இடம் ॥ **72** ॥

இடம் வலம் ஏழ் பூண்ட ⋆
இரவித் தேர் ஓட்டி ⋆
வட முக வேங்கடத்து மன்னும் ⋆
குடம் நயந்த கூத்தனாய் நின்றான் ⋆
குரை கழலே கூறுவதே ⋆
நாத்தன்னால் உள்ள நலம் ॥ **73** ॥

சார்ந்தகடு தேய்ப்பத் ⋆
தடாவிய கோட்டுச்சிவாய் ⋆
ஊர்ந்தியங்கும் வெண் மதியின் ஒண் முயலை ⋆
சேர்ந்து சின வேங்கை பார்க்கும் ⋆

திருமலையே ⋆
ஆயன் புன வேங்கை நாறும் பொருப்பு ‖ **75** ‖

முடிந்த பொழுதில் குற வாணர் ⋆
ஏனம் படிந்துழு சால் ⋆
பைந் தினைகள் வித்த ⋆
தடிந்தெழுந்த வேய்ங்கழை போய் ⋆
விண் திறக்கும் வேங்கடமே ⋆
மேல் ஒரு நாள் தீங்குழல் வாய் வைத்தான் சிலம்பு ‖ **89** ‖

## திருமழிசைப்பிரான் அருளிச்செய்த – நான்முகன் திருவந்தாதி

குறிப்பெனக்குக் ⋆
கோட்டியூர் மேயானை ஏத்த ⋆
குறிப்பெனக்கு நன்மை பயக்க ⋆
வெறுப்பனோ வேங்கடத்து மேயானை ⋆
மெய் வினை நோய் எய்தாமல் ⋆
தான் கடத்தும் தன்மையான் தாள் ‖ **34** ‖

அழைப்பன் ⋆
திருவேங்கடத்தானைக் காண ⋆
இழைப்பன் திருக்கூடல் கூட ⋆
மழைப் பேர் அருவி ⋆
மணி வரன்றி வந்திழிய ⋆
யானை வெருவி அரவொடுங்கும் வெற்பு ‖ **39** ‖

வெற்பென்று ⋆
வேங்கடம் பாடினேன் ⋆
வீடாக்கி நிற்கின்றேன் ⋆

நின்று நினைக்கின்றேன் ⋆
கற்கின்ற நூல்வலையில் பட்டிருந்த ⋆
நூலாட்டி கேள்வனார் ⋆
கால் வலையில் பட்டிருந்தேன் காண் ‖ **40** ‖

காணல் உறுகின்றேன் ⋆
கல் அருவி முத்துதிர ⋆
ஓண விழவில் ஒலி அதிர ⋆
பேணி வரு வேங்கடவா ! ⋆
என் உள்ளம் புகுந்தாய் ⋆
திருவேங்கடம் அதனைச் சென்று ‖ **41** ‖

சென்று வணங்குமினோ ⋆
சேண் உயர் வேங்கடத்தை ⋆
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் ⋆
என்றும் கடிக் கமல நான்முகனும் ⋆
கண் மூன்றத்தானும் ⋆
அடிக் கமலம் இட்டேத்தும் அங்கு ‖ **42** ‖

மங்குல் தோய் சென்னி ⋆
வட வேங்கடத்தானை ⋆
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான் ⋆
திங்கள் சடை ஏற வைத்தானும் ⋆
தாமரை மேலானும் ⋆
குடை ஏறத் தாம் குவித்துக் கொண்டு ‖ **43** ‖

கொண்டு குடங்கால் ⋆
மேல் வைத்த குழவியாய் ⋆
தண்ட அரக்கன் தலை தாளால் பண்டெண்ணிப் ⋆

போம் குமரன் நிற்கும் ⋆
பொழில் வேங்கட மலைக்கே ⋆
போம் குமரர் உள்ளீர் புரிந்து ॥ **44** ॥

புரிந்து மலர் இட்டுப் ⋆
புண்டரீகப் பாதம் ⋆
பரிந்து படுகாடு நிற்ப ⋆
தெரிந்தெங்கும் தான் ஓங்கி நிற்கின்றான் ⋆
தண் அருவி வேங்கடமே ⋆
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு ॥ **45** ॥

வைப்பன் மணி விளக்கா ⋆
மா மதியை ⋆
மாலுக்கென்று எப்பொழுதும் கை நீட்டும் யானையை ⋆
எப்பாடும் வேடு வளைக்கக் ⋆
குறவர் வில் எடுக்கும் வேங்கடமே ⋆
நாடு வளைத்தாடுதுமேல் நன்று ॥ **46** ॥

நன்மணி வண்ணன் ஊர் ⋆
ஆளியும் கோளரியும் ⋆
பொன் மணியும் முத்தமும் பூ மரமும் ⋆
பன்மணி நீரோடு ⋆
பொருதுருளும் கானமும் வானரமும் ⋆
வேடுமுடை வேங்கடம் ॥ **47** ॥

வேங்கடமே ⋆
விண்ணோர் தொழுவதுவும் ⋆
மெய்ம்மையால் வேங்கடமே ⋆
மெய் வினை நோய் தீர்ப்பதுவும் ⋆

வேங்கடமே தானவரை வீழத் ⋆
தன் ஆழிப் படை தொட்டு ⋆
வானவரைக் காப்பான் மலை ‖ **48** ‖

வீற்றிருந்து ⋆
விண்ணாள வேண்டுவார் ⋆
வேங்கடத்தான் பால் திருந்து வைத்தாரே ⋆
பல் மலர்கள் ⋆
மேல் திருந்து வாழ்வார் ⋆
வருமதி பார்த்தன்பினராய் ⋆
மற்றவர்க்கே தாழ்வாய் இருப்பார் தமர் ‖ **90** ‖

## நம்மாழ்வார் அருளிச்செய்த – திருவிருத்தம்

காண்கின்றனகளும் ⋆
கேட்கின்றனகளும் காணில் ⋆
இந் நாள் பாண் குன்ற நாடர் பயில்கின்றன ⋆
இதெல்லாம் அறிந்தோம் மாண் குன்றம் ஏந்தி தண் மா மலை
வேங்கடத்தும்பர் நம்பும் ⋆ சேண் குன்றம் சென்று ⋆
பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே ‖ **8** ‖

மாயோன் வட திருவேங்கட நாட ⋆
வல்லிக் கொடிகாள் ! நோயோ உரைக்கிலும் ⋆
கேட்கின்றிலீர் உரையீர் ⋆
நுமது வாயோ அதுவன்றி வல் வினையேனும் கிளியும்
மெள்கும் ⋆ ஆயோ அடும் தொண்டையோ ⋆
அறையோ இதறிவரிதே ‖ **10** ‖

கயலோ நும கண்கள் என்று ⋆
களிறு வினவி நிற்றீர் ⋆
அயலோர் அறியிலும் ஈதென்ன வார்த்தை ⋆
கடல் கவர்ந்த புயலோடுலாம் கொண்டல் வண்ணன்
புன வேங்கடத்தெம்மொடும் ⋆ பயலோ இலீர் ⋆
கொல்லைக் காக்கின்ற நாளும் பல பலவே ॥ **15** ॥

இசை மின்கள் தூதென்று ⋆
இசைத்தால் இசையிலம் ⋆
என் தலைமேல் அசை மிங்கள் என்றால் அசையும் கொலாம் ⋆
அம் பொன் மா மணிகள் திசை மின் மிளிரும் திருவேங்கடத்து
வன் தாள் ⋆ சிமயம் மிசை ⋆
மின் மிளிரியப் போவான் வழிக் கொண்ட மேகங்களே ॥ **31** ॥

ஒண்ணுதல் மாமை ஒளி பயவாமை ⋆
விரைந்து நந் தேர் நண்ணுதல் வேண்டும் ⋆
வலவ ! கடாகின்று ⋆
தேன் நவின்ற விண் முதல் நாயகன் நீள் முடி வெண்
முத்த வாசிகைத்தாய் ⋆ மண் முதல் சேர்வுற்று ⋆
அருவி செய்யா நிற்கும் மா மலைக்கே ॥ **50** ॥

‡ முலையோ முழு முற்றும் போந்தில ⋆
மொய் பூங்குழல் குறிய கலையோ அரை இல்லை ⋆
நாவோ குழறும் ⋆
கடல் மண் எல்லாம் விலையோ என மிளிரும் கண்
இவள் பரமே ! ⋆ பெருமான் மலையோ ⋆
திருவேங்கடம் என்று கற்கின்ற வாசகமே ॥ **60** ॥

காவியும் நீலமும் ⋆
வேலும் கயலும் பல பல வென்று ⋆
ஆவியின் தன்மை அளவல்ல பாரிப்பு ⋆
அசுரைச் செற்ற மாவியம் புள் வல்ல மாதவன் கோவிந்தன்
வேங்கடம் சேர் ⋆ தூவியம் பேடை அன்னாள் ⋆
கண்கள் ஆய துணை மலரே ‖ **67** ‖

உறுகின்ற கன்மங்கள் ⋆
மேலன ஓர்ப் பிலராய் ⋆
இவளைப் பெறுகின்ற தாயர் மெய்ந் நொந்து பெறார்கொல் ⋆
துழாய் குழல் வாய்த் துறுகின்றிலர் தொல்லை வேங்கடம்
ஆட்டவும் சூழ்கின்றிலர் ⋆ இறுகின்றதால் இவள் ஆகம் ⋆
மெல் ஆவி எரி கொள்ளவே ‖ **81** ‖

## நம்மாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருவந்தாதி

கல்லும் கனை கடலும் ⋆
வைகுந்த வானாடும் ⋆
புல் என்றொழிந்தன கொல் ஏ பாவம் ⋆
வெல்ல நெடியான் நிறம் கரியான் ⋆
உள் புகுந்து நீங்கான் ⋆
அடியேனதுள்ளத்தகம் ‖ **68** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆
நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆

மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ॥ **36** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

மழைக் கூந்தல்
தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும் ⋆
என்னும் இவையே முலையா வடிவமைந்த ⋆
அன்ன நடைய அணங்கே ॥ **4** ॥

மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை ⋆
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை ⋆
கொல் நவிலும் ஆழிப் படையானை ॥ **68** ॥

## திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த – இராமாநுச நூற்றந்தாதி

‡ நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் ⋆
நிறை வேங்கடப் பொற் குன்றமும் ⋆
வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும் ⋆
உன்தனக்கெத்தனை இன்பம் தரும் உன் இணைமலர்த் தாள் ⋆
என் தனக்கும் அது ⋆
இராமானுச ! இவை ஈந்தருளே ॥ **76** ॥

‡ இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் ⋆
மாலிருஞ்சோலை என்னும் பொருப்பிடம் ⋆
மாயனுக்கென்பர் நல்லோர் ⋆
அவை தம்மொடும் வந்திருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து ⋆

இன்றவன் வந்திருப்பிடம் ⋆
என்தன் இதயத்துள்ளே தனக்கின்புறவே ॥ **106** ॥

### தேசிக பிரபந்தம் – அதிகாரசங்கிரகம்

‡ கண்ணன் அடி இணை எமக்குக் காட்டும் வெற்பு ⋆
கடு வினையர் இரு வினையும் கடியும் வெற்பு ⋆
திண்ணம் இது வீடென்னத் திகழும் வெற்பு ⋆
தெளிந்த பெரும் தீர்த்தங்கள் செறிந்த வெற்பு ⋆⋆
புண்ணியத்தின் புகல் இதெனப் புகழும் வெற்பு ⋆
பொன் உலகில் போகம் எல்லாம் புணர்க்கும் வெற்பு ⋆
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு ⋆
வேங்கட வெற்பென விளங்கும் வேத வெற்பே ॥ **43** ॥

**திரு அலர்மேல்மங்கை சமேத திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்**